# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஒற்றோபர் மாதம் 07 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 16.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம்

[2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ-ஓ. 8/2002
4730

### எவையேனும் குடும்ப வன்முறைச் செயல்களைத் தடுப்பதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) எவ்வாள் தொடர்பில் குடும்ப வன்முறைச் செயலொன்று புரியப்பட்டதோ, புரியப்படுகின்றதோ அல்லது புரியப்படும் சாத்தியமுள்ளதோ அவ்வாள் (இதனகத்துப் பின்னர் "துன்புற்ற ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார் ) அத்தகைய குடும்ப வன்முறைச் செயலைத் தடுப்பதற்குப் பாதுகாப்புக் கட்டளையொன்றுக்காக நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். துன்புற்ற ஆள் விண்ணப்பமொன்றைச் செய்தல்.

(2) ஓராமுட்பிரிவின் கீழான ஒரு விண்ணப்பம் -

(அ) துன்புற்ற ஆளொருவரினால் ;

(ஆ) துன்புற்ற ஆள் ஒரு சிறுவராகவுள்ளவிடத்து, அத்தகைய சிறுவரின் சார்பில் -

(i) சிறுவரின் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் ;

(ii) எந்த ஆளுடன் சிறுவர் வசிக்கின்றாரோ அந்த ஆளினால் ;

(iii) 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் ; அல்லது

(இ) துன்புற்ற ஆளின் சார்பில் பொலிசு அலுவலரால் ;

செய்யப்படலாம்.

(3) ஓராமுட்பிரிவின் கீழான ஏதேனும் விண்ணப்பம் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்ட படிவத்தின் இரு பிரதிகளில் இருத்தல் வேண்டும் என்பதுடன், எந்த நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள்ளாக துன்புற்ற ஆள் அல்லது இயைபான ஆள் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வசிக்கின்றாரோ அல்லது குடும்ப வன்முறைச் செயல் புரியப்பட்டதோ, அல்லது புரியப்படும் சாத்தியமுள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்குச் செய்யப்படுதலும் வேண்டும்.

(4) மேற்சொல்லப்பட்ட குடும்ப வன்முறைச் செயல்கள் பற்றி அறிந்துள்ள எவரேனும் ஆளின் சத்தியக் கடதாசிகளை அதனை ஆதாரப்படுத்துவதில் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாம்.

விண்ணப்பத்தைப் பரிசீலித்தல்.

**3.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், நீதிமன்றம் உடனடியாக அவ்விண்ணப்பத்தைப் பரிசீலித்தல் வேண்டும்.

இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையை வழங்குவதற்கான அல்லது வழங்க மறுப்பதற்கான நடபடிமுறை.

**4.** (1) விண்ணப்பம் மற்றும் சத்தியக் கடதாசி (ஏதேனும் இருப்பின்) என்பவற்றைப் பரிசீலித்ததன்மேல், நீதிமன்றம் –

(அ) விண்ணப்பத்தை விசாரித்துத் தீர்மானிக்கும் வரை, இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குவது அவசியமானதெனத் திருப் திப்படுமிடத்து (இதனகத்துப் பின்னர் "இடைக்கால கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடைக்காலப் பாதுகாப்புக் கட்டளை ஒன்றை (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு உடனடியாக வழங்குதலும் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் அத்தகைய விண்ணப்பம் தொடர்பான விசாரணையை நடத்துவதற்கு கட்டளையிடுதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) அச்சந்தர்ப்பங்களில் இடைக்கால கட்டளை ஒன்றை வழங்குவது அவசியமில்லையெனத் திருப்திப் படுமிடத்து, விண்ணப்பத் தேதியிலிருந்து பதினான்கு

நாட்களுக்குப் பிந்தாத ஒரு தேதியில் அத்தகைய விண்ணப்பம் தொடர்பான விசாரணையை நடாத்து வதற்கு கட்டளையிடுதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், நீதிமன்றமானது அவசியமானதெனக் கருதுகின்றவிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய இடைக்கால கட்டளையை வழங்குவதற்கு முன்னர் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளை அல்லது வேறு எவரேனும் முக்கியமான சாட்சியை சத்தியத்தின் மீது விசாரிக்கலாம்.

(2) இடைக்கால கட்டளையை வழங்குவதைத் தீர்மானிப்பதில் நீதிமன்றம் ஏதேனும் குடும்ப வன்முறைச் செயல் புரியப்படுவதைத் தடுப்பதற்கான அவசரத் தேவை, மற்றும் துன்புற்ற ஆளின் பாதுகாப்பை உறுதி செய்தற்கான அவசியம் என்பவற்றைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

(3) விடயத்திற்கேற்ப (1) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழான கட்டளையை வழங்கியதன்மேல், பிரதிவாதிக்கெதிராக ஒரு பாதுகாப்புக் கட்டளை ஏன் ஆக்கப்படு தலாகாது என்பதற்கு, அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று காரணம் காட்டுமாறு, நீதிமன்றம் அவருக்கு அறிவித்தல் வழங்கச் செய்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையொன்று, விடயத்துக்கேற்ப, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுடன் சேர்த்து, (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலுடன் பிரதிவாதிக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஆவணங்களின் சேர்ப்பிப்பை, உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகிப்பதன் மூலம் பிசுக்கால் அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பயனுறுத்தமுடியாதவிடத்து, அவை, அவரது வழமையான வதிவிடத்தில் துலாம்பரமானவோர் இடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படின், அத்தகைய ஆவணங்கள் அத்தகைய பிரதி வாதிக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இடைக்காலக் கட்டளை.

**5.** (1) இடைக்காலக் கட்டளை ஒன்று –

(அ) பாதுகாப்புக் கட்டளையொன்று வழங்கப்படுதலை எதிர்நோக்கி குடும்ப வன்முறைச் செயல் எதனையும் புரிவதில் இருந்து அல்லது புரியச் செய்வதில் இருந்து பிரதிவாதியைத் தடைசெய்தல் வேண்டும் ;

(ஆ) விடயத்தின் சூழ்நிலைகள் காரணமாகவும் அத்துடன் விடயத்திற்கேற்ப, துன்புற்ற ஆளினால் அல்லது துன் புற்ற ஆளின் சார்பில் வேறு எவரேனும் ஆளினால் அல்லது வேறு எவரேனும் முக்கிய சாட்சியினால் சத்தியத்தின்மீது கொடுக்கப்பட்ட சான்றின் மீது, அத்த கைய தடை அல்லது நிபந்தனை குடும்ப வன்முறைச் செயல் எதனையும் தடுப்பதற்கு அவசியமானதென நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து 11 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் உபபந்திகள் (அ) தொடக்கம் (ஔ) வரையில் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் தடையை அல்லது நிபந்தனையை உள்ளடக்கலாம்.

(2) இடைக்கால கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றமானது –

(அ) திறத்தவர்களுக்கு ஆலோசனையளித்தல் திறத்தவர் களின் நலனுக்கானதாகவுள்ளதென அது திருப்திப்படு மிடத்து, அவ்வாறு செய்யும்படி சமூக சேவக ரொருவருக்கு அல்லது குடும்ப ஆலோசகரொரு வருக்குக் கட்டளையிடலாமென்பதுடன், அத்தகைய ஆலோசனையளித்தல் அமர்வுகளுக்கு வருகை தரும் படியும் திறத்தவர்களுக்குக் கட்டளையிடலாம் ;

(ஆ) துன்புற்ற ஆளைப்பாதுகாப்பதற்கும் அவரின் உட னடிக்காப்புக்கு ஏற்பாடுசெய்வதற்கும் நியாயமான முறையில் அவசியமாகவுள்ளதென அது திருப்திப்படு மிடத்து, கட்டளை கடைபிடிக்கப்படுவதனைக் கண் காணிக்கும்படியும், விண்ணப்பம் பற்றிய விசாரணைக் காக, 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத்துக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும்படியும் சமூக சேவகரொருவருக்கு, குடும்ப ஆலோசகரொருவருக்கு,

நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரொருவருக்கு, குடும்ப சுகாதாரப் பணியாளரொருவருக்கு, அல்லது சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலரொரு வருக்குக் கட்டளையிடலாம்.

(3) நீதிமன்றத்தினால் பாதுகாப்புக் கட்டளை வழங்கப்படும் வரை அல்லது அத்தகைய இடைக்காலக் கட்டளை நீக்கப்படும் வரை, ஓர் இடைக்காலக் கட்டளை வலுவுடையதாக தொடர்ந்திருந்து வருதல் வேண்டும்.

*பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து பாதுகாப்புக் கட்டளையை வழங்குதல்.*

**6.** (1) நாலாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றுமிடத்து, நீதிமன்றம் அவ்விண்ணப் பத்தை விசாரிக்கத் தொடங்கி ஏற்கனவே பெறப்பட்ட ஏதேனும் சான்றையும், அத்துடன் அது அவசியமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய மேலதிக சத்தியக் கடதாசிகளை அல்லது வாய்மூலச் சான்றைப் பரிசீலித்தல் வேண்டும். அவை வழக்கு நடவடிக்கைப் பதிவேட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(2) பிரதிவாதி சட்டப்பிரதிநிதியொருவரால் பிரதிநிதித்து வப்படுத்தப்படாதவிடத்து, நீதிமன்றம் அதன் சொந்த விருப்பில் அல்லது துன்புற்ற ஆளின் வேண்டுகோளின்மீது –

(அ) துன்புற்ற ஆள் உட்பட்ட, சாட்சிகளை விசாரித்தல் பிரதிவாதியினால் நடாத்தப்படுதலாகாது எனக் கட்டளை ஆக்கலாம் ;

(ஆ) நீதிமன்றம் அவ்வினாவைச் செம்மையாக துன்புற்ற ஆளுக்கு அல்லது சாட்சிக்கு அச்சொட்டாகத் திருப்பிக் கூறுவதை இயலச் செய்யும் வண்ணம் பிரதிவாதி நீதிமன்றத்துக்கு அவ்வினாவைக் கூறுதல் வேண்டும் என்றும் கட்டளை ஆக்கலாம்.

(3) விசாரணையின் பின்னர் நீதிமன்றமானது பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குவது அவசியமானது எனத் திருப்திப் படுமிடத்து, 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) நாலாம்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று பிரதிவாதி தோன்றி வன்முறைச் செயலை அல்லது செயல்களைப் புரிந்ததாக ஒப்புக்கொள்ளாது, ஆனால் பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குவதனை ஆட்சேபிக்காதவிடத்து, நீதிமன்றம் 8ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

*பிரதிவாதி தோன்றாத போது பாதுகாப்புக் கட்டளையை வழங்குதல்.*

**7.** (1) நாலாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று பிரதிவாதீ நீதிமன்றத்தில் தோன்றாதிருப்பதோடு பிரதிவாதியிடம் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் நீதிமன்றம் திருப்தியடைகின்றவிடத்து, ஏற்கனவே பெறப்பட்ட சான்றின் மீதும் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய சத்தியக் கடதாசிகள் வகையான மேலதிக சான்றின் அல்லது பிரதிவாதி வருகை தராதபோது பதிவுசெய்யப்பட்ட வாய்மூலச் சான்றின்மீதும் நீதிமன்றம் விண்ணப்பத்தைப் பரிசீலிக்க முற்படுதல் வேண்டும். அவை வழக்கு நடவடிக்கைப் பதிவேட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(2) நீதிமன்றம் அதன் முன்னுள்ள சான்றுகளைப் பரிசீலித்ததன்மேல் பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குவது அவசியமானதென திருப்திப்படுவதன்மீது 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

*பாதுகாப்புக் கட்டளை ஒன்றை வழங்குவதில் கவனத்தில் எடுக்க வேண்டிய கருமங்கள்.*

**8.** நீதிமன்றமானது, பாதுகாப்புக் கட்டளை ஒன்றை வழங்க வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கையில் ஏதேனும் குடும்ப வன்முறைச் செயல் புரிவதைத் தடுப்பதற்கான தேவை, துன்புற்ற ஆளின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கான தேவை ஆகியவற்றை கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

*பாதுகாப்புக் கட்டளை பிரதிவாதியிடம் சேர்ப்பிக்கப் படுதல்.*

**9.** பாதுகாப்புக் கட்டளையொன்றை வழங்கியதன்மேல், நீதிமன்றம் உடனடியாக –

(அ) அத்தகைய கட்டளையை பிரதிவாதியிடம் சேர்ப் பிக்கச் செய்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய கட்டளையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் –

(i) துன்புற்ற ஆள் ;

(ii) விண்ணப்பகாரர் துன்புற்ற ஆளாக இராத விடத்து விண்ணப்பதாரர் ;

(iii) எந்தப் பொலிசு நிலையங்களின் நியாயாதிக் கத்துக்குள்ளாக பிரதிவாதி துன்புற்ற ஆளும் வசிக்கின்றனரோ அந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பான அலுவலர்கள்,

என்போருக்கும் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

**10.** (1) பாதுகாப்புக் கட்டளையொன்று – பாதுகாப்புக் கட்டளை.

(அ) ஏதேனும் குடும்ப வன்முறைச் செயல் புரிவதிலிருந்து அல்லது புரியச் செய்வித்தலிலிருந்து பிரதிவாதியைத் தடைசெய்தல் வேண்டும் ;

(ஆ) விடயத்தின் சூழ்நிலைகள் காரணமாகவும் அத்துடன் விடயத்திற்கேற்ப துன்புற்ற ஆளினால் அல்லது துன்புற்ற ஆள் சார்பில் வேறு எவரேனும் ஆளினால் அல்லது வேறு எவரேனும் முக்கிய சாட்சியினால் சத்தியத்தின் மீது கொடுக்கப்பட்ட சாட்சியத்தின் மீது துன்புற்ற ஆளின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்துவதற்கு அவ்வாறு செய்வது அவசிய மானதென நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) தொடக்கம் (ஔ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் தடையையும் அல்லது 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் குறைநிரப்புக் கட்டளையையும் கொண்டிருக்கலாம்.

(2) பாதுகாப்புக் கட்டளையொன்று அதன்கண் குறித்துரைக் கப்பட்டவாறு 12 மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கு தொடர்ந்து வலுவிலிருத்தல் வேண்டும்.

*இடைக்காலக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை கொண்டிருக்கக் கூடிய தடைகள்.*

**11.** (1) நீதிமன்றமானது, ஒரு இடைக்காலக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை மூலமாக –

(அ) துன்புற்ற ஆளினாலும் பிரதிவாதியினால் சேர்ந்து வாழப் பயன்படுத்தப்படும் வதிவிடத்துக்குள் அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்துக்குள் நுழைவதிலிருந்து ;

(ஆ) துன்புற்ற ஆளின் –

(i) வதிவிடம் ;

(ii) தொழில் இடம் ;

(iii) பாடசாலை,

என்பவற்றுக்குள் நுழைவதிலிருந்து ;

(இ) துன்புற்ற ஆள் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் ஏதேனும் தங்குமனைக்குள் நுழைவதிலிருந்து ;

(ஈ) துன்புற்ற ஆள் சாதாரணமாக வசித்துவரும் அல்லது வசித்துவந்த சேர்ந்துவாழும் வதிவிடத்திற்குள் நுழைவதினை அல்லது அத்தகைய சேர்ந்துவாழும் வதிவிடத்தில் அல்லது அவ்வதிவிடத்தின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பகுதியில் தங்கியிருப்பதனைத் தடுப்பதிலிருந்து ;

(உ) சேர்ந்துவாழ் வதிவிடத்தில் இருப்பதிலிருந்து ;

(ஊ) துன்புற்ற ஆளின் எவரேனும் பிள்ளையுடன் தொடர்பு வைப்பதிலிருந்து அல்லது நீதிமன்றம் அவ்வாறு செய்வது அத்தகைய பிள்ளையின் மிகச் சிறந்த நலனுக்கானதென திருப்திப்பட்டவிடத்து, தோதானதென அது கருதக்கூடிய அத்தகைய நிபந்தனைகளைத் திருப்திசெய்ததன் மீது தவிர, அத்தகைய பிள்ளையுடன் தொடர்பு வைப்பதிலிருந்து ;

(எ) துன்புற்ற ஆள் சேர்ந்தனுபவிக்கும் மூலவளங்களைப் பயன்படுத்துவதனை அல்லது அணுகுவதனைத் தடுப்பதிலிருந்து ;

(ஏ) எத்தன்மைத்தான எம்முறையிலேனும் துன்புற்ற ஆளுடன் தொடர்பு வைப்பதிலிருந்து அல்லது தொடர்பை ஏற்படுத்த முனைவதிலிருந்து ;

(ஐ) துன்புற்றவரான ஆளுக்கு உதவி செய்கின்றவரான உறவினர், நண்பர், சமூக சேவகர் அல்லது மருத்துவ அலுவலர் ஒருவராக அவர் இருப்பினுஞ்சரி, வேறு எவரேனும் ஆளுக்கெதிராக வன்முறைச் செயல்கள் எவற்றையும் புரிவதிலிருந்து ;

(ஒ) தொல்லை விளைவிப்பதற்காக துன்புற்ற ஆளைச் சுற்றிப் பின்தொடருவதிலிருந்து ;

(ஓ) துன்புற்ற ஆளின் அல்லது பாதுகாப்புக் கட்டளையில் நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடியவாறாக பிரதிவாதி யிடமிருந்து பாதுகாப்பு தேவைப்படக்கூடிய வேறு ஆளின் பாதுகாப்புக்கு உடல்நலத்துக்கு அல்லது நல்வாழ்வுக்கு குந்தகமானதென நீதிமன்றம் அபிப் பிராயப்படும் அத்தகைய வேறு நடத்தையில் ஈடுபடு வதிலிருந்து ;

(ஔ) துன்புற்ற ஆளை அனாதியற்ற நிலைக்கு உட்படுத்து வதற்காக திருமண வீட்டை விற்பதிலிருந்து, கைமாற்று வதிலிருந்து, பராதீனப்படுத்துவதிலிருந்து அல்லது பாரபந்தத்துக்குட்படுத்துவதிலிருந்து,

பிரதிவாதியைத் தடை செய்யலாம்.

(2) ஓராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தடையை விதிப்பதில், நீதிமன்றமானது –

(அ) துன்புற்ற ஆளின் அல்லது துன்புற்ற ஆளின் பிள்ளைகளின் (எவரேனும் இருப்பின்) மற்றும் பிரதிவாதியின் பிள்ளைகளின் (எவரேனும் இருப்பின்) தங்கிட வசதிக்கான தேவை ;

(ஆ) கட்டளையை ஆக்குவதன் விளைவாக பிரதிவாதிக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு விளை விக்கப்படக்கூடிய ஏதேனும் இக்கட்டு,

என்பன பற்றிக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

குறை நிரப்புக் கட்டளைகள்.

**12.** (1) பாதுகாப்புக் கட்டளையொன்று ஆக்கப்பட்டவிடத்தும் துன்புற்ற ஆளின் உடனடிப் பாதுகாப்புக்கு, உடல்நலத்துக்கு அல்லது நல்வாழ்வுக்கு ஏற்பாடுசெய்து அதனைப் பாதுகாப்பது நியாயமாக அவசியமானதென நீதிமன்றம் திருப்திப்படுகின்ற விடத்தும், நீதிமன்றமானது –

(அ) பிரதிவாதி தமது உடைமையில் வைத்திருக்கக்கூடிய எவையேனும் ஆயுதங்களைக் கைப்பற்றுமாறு பொலிசாருக்கு கட்டளையிடலாம் ;

(ஆ) அத்தகைய துன்புற்ற ஆளினதும் எவரேனும் பிள்ளைகளதும் தனிப்பட்ட ஆதனங்களை எடுத்து வருவதில் உதவி செய்வதற்காக ஏதேனும் இடத்துக்கு துன்புற்ற ஆளுடன் கூடச் செல்லுமாறு பொலிசாருக்குக் கட்டளையிடலாம் ;

(இ) பிரதிவாதியையும் துன்புற்ற ஆளையும் கட்டாய ஆலோசனை அமர்வுகளுக்கு, உளவியல் ரீதியான சிகிச்சைக்கு அல்லது கிடைக்கக்கூடியவாறான வேறு வகைப்பட்ட புனர்வாழ்வுக்குச் சிகிச்சைக்கு சமூகமளிக்க வேண்டுமெனக் கட்டளையிடலாம் ;

(ஈ) துன்புற்ற திறத்தவர், அத்தகைய ஆள் அவ்வாறு வேண்டிக் கொண்டால், உறைவிடமொன்றில் வைக்கப் படவேண்டுமென அல்லது அவருக்குத் தற்காலிக தங்கிட வசதி வழங்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்; அந்த இடமும் ஏனைய விவரங்களும், அவசியமாயின், அந்தரங்கமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும் ;

(உ) துன்புற்ற திறத்தவருக்கும் பிரதிவாதிக்குமிடையேயான பாதுகாப்புக் கட்டளை கடைப்பிடிக்கப்படுவதனைக் கண்காணிப்பதற்காக சமூக சேவகர், குடும்ப ஆலோசகர், நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர், அல்லது குடும்ப சுகாதாரப் பணியாளர், என்போருக்குக் கட்டளையிடலாம் என்பதுடன் மூன்று மாதங்களுக்குக்கொரு தடவை அது தொடர்பான அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கலாம் ;

(ஊ) எவரேனுமாளுக்கு ஆதாரமளிப்பதற்குப் பிரதிவாதிக்குக் கடமையொன்றுள்ளவிடத்து, அத்தகைய ஆளுக்கு அவசரப் பணவகையான உதவி வழங்குமாறு பிரதிவாதிக்குக் கட்டளையிடலாம் ; அத்துடன்

(எ) அத்தகைய கட்டளை நடைமுறையிலிருக்கும் காலப் பகுதியின்போது துன்புற்ற திறத்தவர் எந்த வதிவிடத்தில் வதிவாரோ அந்த ஏதேனும் வதிவிடத்தினுட் பிரவேசிக்காதிருப்பதற்கு அல்லது தங்கியிருப்பதற்குப் பிரதிவாதி 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் தடைசெய்யப்பட்டுள்ளார் என்பது எவ்வாறிருப்பினும், அத்தகைய வதிவிடத்தில் துன்புற்ற ஆள் இருப்பாட்சியில் தொடர்ந்திருப்பதனை இயலச்செய்வதற்கு அவசியமானவாறான, அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யுமாறும் அத்தகைய வசதிகளை வழங்குமாறும் அல்லது விடயத்துக்கேற்ப அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யுமாறு அல்லது அத்தகைய வசதிகளை வழங்குமாறு பிரதிவாதிக்குக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளின் கீழான கட்டளையொன்று, உரிய விசாரணையின் பின்னரும், துன்புற்ற ஆளுக்கும் பரதிவாதிக்கும் உள்ள நிதிசார் தேவைகளுக்கும் ஏனைய மூலவளங்களுக்கும் கவனஞ்செலுத்தியும் ஆக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகையவொரு கட்டளை, 1999ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பராமரிப்புச் சட்டத்தின்கீழ் எவரேனுமாளின் உரிமைகளைப் பாதித்தலாகாது.

(3) நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் கட்டளையிடப்பட்ட ஏதேனும் கொடுப்பனவை பிரதிவாதி செலுத்தத் தவறியதன்மேல், பிரதிவாதியின் தொழில்தருநரை, நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கக்கூடிய நிதி நிவாரணமாகப் பிரதிவாதிக்கு வருமதியான ஊதியத்தின் ஒரு பாகத்தை அல்லது அதன் முழுமையையும் துன்புற்ற ஆளுக்கு நேரடியாகச் செலுத்துமாறு பணிக்கலாம்.

*திறத்தவர்களின் சம்மதத்துடன் ஆக்கப்பட்ட கட்டளைகள்.*

**13.** நீதிமன்றமானது, நடவடிக்கைகளுக்கான திறத்தவர்களின் சம்மதத்துடன் குற்றப்பொறுப்பினை எண்பித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளல் இன்றி இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் கட்டளையை ஆக்கலாம். அத்துடன் அத்தகைய கட்டளை குற்றப்பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் விளைவாக அல்லது குற்றப்பொறுப்பை எண்பிப்பதன் மீது செய்யப்பட்டுள்ளதாகப் பொருள்கொள்ளப்பட லாகாது.

*பாதுகாப்புக் கட்டளையை வேறுபடுத்தல் அல்லது நீக்கம் செய்தல்.*

**14.** பாதுகாப்புக் கட்டளையொன்று, ஒன்றில் துன்புற்ற ஆளினால் அல்லது பிரதிவாதியினால் செய்யப்பட்ட விண் ணப்பத்தின் மீதும் அத்துடன் அத்தகைய மாற்றத்தை, திரிபை, வேறுபடுத்தலை, விஸ்தரிப்பை அல்லது நீக்கம் செய்தலைத் தேவைப்படுத்தும் சூழ்நிலை மாற்றங்கள் உள்ளன என நீதிமன்றம் திருப்திப்பட்டவிடத்தும் அது மாற்றப்படலாம், திரிபுசெய்யப்பட லாம், வேறுபடுத்தப்படலாம், விஸ்தரிக்கப்படலாம், அல்லது நீக்கஞ் செய்யப்படலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய மாற்றம், திரிபு, வேறு பாடு, விஸ்தரிப்பு அல்லது நீக்கஞ்செய்தல் எதுவும், துன்புற்ற ஆளையும் பிரதிவாதியையும் விசாரிக்காமல், செய்யப்படுதல் ஆகாது :

ஆயின், மேலும், விண்ணப்பம் சுதந்திரமாகவும் தன்னிச்சை யாகவும் செய்யப்பட்டதென நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய துன்புற்ற ஆளுக்கு அத்தகைய விண்ணப்பத்தை அது வழங்குதல் ஆகாது.

*பிரதிவாதியும் சாட்சிகளும் சமுகமளித்தல்.*

**15.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கத் தேவைப்படுத்துதற்கும் சான்றளிப்ப தற்கும் விண்ணப்பகாரரால் தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் மற்றும் பிரதிவாதி சமுகந்தருவதனைக் கட்டாயப்படுத்து வதற்கும், 1979 ஆம் ஆண் டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் V ஆம், VI ஆம் அத்தியாயங்களின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*வாழ்க்கைத் துணை தகுதிவாய்ந்த சாட்சி ஒன்றாதல்.*

**16.** இச்சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் ஒரு வாழ்க்கைத் துணை இன்னொரு வாழ்க்கைத் துணைக்கு எதிராக தகுதிவாய்ந்த சாட்சி ஒன்றாதல் வேண்டும்.

மேன் முறையீட்டுக்கான உரிமை.

**17.** ஆறாம் பிரிவின் கீழ் அல்லது 7 ஆம் பிரிவின்கீழ் நீதிவானினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் அதிருப்தியுற்ற எவரேனும் ஆள், அக்கட்டளையானது குற்றவியல் வழக்கில் அல்லது விடயத்தில் நீதிவான் நீதிமன்றத்தினால் எடுத்து மொழியப்பட்ட இறுதிக் கட்டளை என்றாற்போன்று அதேமுறையில் அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட இயைபான மேல்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம் ; அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 320 தொடக்கம் 330 வரையிலான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகளும் 357 ஆம் 358 ஆம் பிரிவுகளும், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய மேன்முறையீட்டுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 323ஆம் பிரிவில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும், 6ஆம் அல்லது 7 ஆம் பிரிவின் கீழான கட்டளை, பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக மேல்நீதிமன்றம் வேறுவகையாகப் பணித்தாலொழிய, அத்தகைய மேன்முறையீடு காரணமாக நிறுத்திவைக்கப்படுதல் ஆகாது :

ஆயின், மேலும், நீதிவான் பதிவேட்டை மேல்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கும்போது, வலுவுக்கிடும் நோக்கங்களுக்காக அவரது கட்டளையின் பிரதியொன்றை எடுத்து வைத்திருத்தல் வேண்டும்.

கட்டளைகள் வலுவுக்கிடுதல்.

**18.** விடயத்துக்கேற்ப, எந்த பிரதிவாதிக்கெதிராக இடைக்காலக் கட்டளை அல்லது பாதுகாப்புக் கட்டளை வழங்கப் பட்டுள்ளதோ அந்தபிரதிவாதி எவரும், அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து, தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஓராண்டை விஞ்சாததுமான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

குற்றவரைதலில் நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய நடபடிமுறை.

**19.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், நீதிமன்றமானது, குற்றம் வரைதல் தொடர்பில் அதற்கு தகுதிவாய்ந்ததென அது கருதக்கூடிய வாறான நடவடிக்கைமுறை ஒன்றைப் பின்பற்றலாம்.

குறித்த சில விடயங்களில் ஏதேனும் கருத்தை அச்சிடுகின்ற அல்லது வெளியிடுகின்ற ஆட்கள் தண்டிக்கப்படுதல்.

**20.** (அ) இச்சட்டத்தின்கீழான விண்ணப்பமொன்றில் விண்ணப்பகாரரொருவரின் அல்லது பிரதிவாதி யொருவரின் ஆளடையாளத்தை அறியத்தரக் கூடியதான பெயரை அல்லது ஏதேனும் கருமத்தை; அல்லது

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தில், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கை தொடர்பாக, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றல்லாத ஏதேனும் கருமத்தை,

அச்சிடுகின்ற அல்லது வெளியிடுகின்ற எவரேனுமாள், இரண் டாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை மறியற் றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது மறியற் றண்டனையினாலும் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

ஏனைய வழக்குகள் தடை செய்யப்பட வில்லை.

**21.** இச்சட்டத்தின் உள்ளதெதுவும், தனியான குடியியல் வழக்கொன்றை அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையைத் தொடுப்பதிலிருந்து, துன்புற்ற ஆளை, தடைசெய்வதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**23.** இச்சட்டத்தின், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய –

"சிறுவர்" என்பது 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆள் ஒருவர் என்று பொருளாகும் ;

"குடும்ப வன்முறை" என்பது இயைபான ஆள் ஒருவரால் வீட்டுச் சூழலுக்குள்ளாக அல்லது வெளியே புரியப்பட்டதும் அல்லது விளைவிக்கப்பட்டதும் துன்புற்ற ஆளுக்கும் இயைபான ஆளுக்கும் இடையேயுள்ள உறவுமுறையின் தனிப்பட்ட தன்மையிலிருந்து எழுவதுமான –

(அ) I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றாக அமையும் ஒரு செயல் ;

(ஆ) ஏதேனும் உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகம்

என்று பொருளாகும் ;

"உணர்ச்சிரீதியான துஷ்பிரயோகம்" என்பது துன்புற்ற ஆளை நோக்கிப் புரியப்பட்ட கடுமையான கொடூரமான, மனிதத்தன்மையற்ற, இழிவுபடுத்தும் அல்லது இம்சைப்படுத்தும் ஒருவகைப்பட்ட நடத்தை என்று பொருளாகும்;

"சேர்த்தனுபவிக்கும் மூலவளங்கள்" என்பது துன்புற்ற ஆளும் பிரதிவாதியும் வழமையாகப் பயன்படுத்தும் அல்லது அணுகும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் என்று பொருளாகும் ;

"இயைபான ஆள்" என்பது துன்புற்ற ஆள் ஒருவர் தொடர்பில், துன்புற்ற ஆளின் -

(அ) (i) வாழ்க்கைத்துணை ;

(ii) முன்னைய வாழ்க்கைத்துணை ;

(iii) கூடிவாழும் துணைவர் என்று ;

(ஆ) துன்புற்ற ஆளின் அல்லது வாழ்க்கைத் துணையின், முன்னைய வாழ்க்கைத் துணையின் அல்லது துன்புற்ற ஆளின் கூடிவாழும் துணைவரின் -

(i) தந்தை, தாய், பாட்டனார், பாட்டி, மாற்றாந் தந்தை, மாற்றாந் தாய் ;

(ii) மகன், மகள், பேரன், பேத்தி, மாற்றாந் தாயின் மகன், மாற்றாந் தாயின் மகள்;

(iii) சகோதரன், சகோதரி, ஒன்றுவிட்ட சகோதரன், ஒன்றுவிட்ட சகோதரி, மாற்றாள் சகோதரன், மாற்றாள் சகோதரி ;

(iv) பெற்றோரின் சகோதர, சகோதரிகள் ;

(v) மருமகன், மருமகள் ;

(vi) பெற்றோரின் சகோதர, சகோதரிகளின் பிள்ளைகள் ;

என்று பொருளாகும் ;

"பிரதிவாதி" என்பது, ஒரு பாதுகாப்புக் கட்டளை அல்லது ஓர் இடைக்காலக் கட்டளை தொடர்பாக, எத்தகைய கட்டளை எவ்வியைபான ஆளுக்கெதிராக நாடப்படுகின்றதோ அல்லது ஆக்கப்படுகின்றதோ அவ்வியைபான ஆள் என்று பொருளாகும் ;

அட்டவணை - I

(பிரிவு 22)

1. தண்டனைச் சட்டக்கோவையின் XVI ஆம் அத்தியாயத்தில் அடங்கியுள்ள எல்லாத் தவறுகளும்

2. வன் பறி - தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 372

3. குற்ற அச்சுறுத்தல் - தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 483

4. மேற்படி தவறுகளுள் எதனையும் புரிவதற்கான முயற்சி.

அட்டவணை - II

(பிரிவு 2(3) )

**விண்ணப்பம்**

.....................................நீதிவான் நீதிமன்றத்தில்,

..................என்னும் முகவரியைச் சேர்ந்த அ, ஆ என்பவர் துன்புற்ற ஆளின் பெயர், விவரணம் மற்றும் முகவரி அத்துடன் அவர் ஏதேனும் பிரதிநிதித்துவத் தன்மையில் வழக்குத் தொடர்ந்தால் அத்தன்மையைக் குறிப்பிடுக - உ.ம். தமது பாதுகாவலர் மூலம் அல்லது வழக்கு நண்பர் மூலம் பராயமடையாத அல்லது சித்தசுவாதீனம் அற்ற துன்புற்ற ஆள் தோற்றினால், அதாவது .....................................என்னும் முகவரியைச் சேர்ந்த அவரது வழக்கு நண்பர் இ, ஈ என்பவர் மூலம் பராயமடையாதவர்) .................................... (துன்புற்ற ஆள்)

எதிராக

..................................... என்னும் முகவரியைச் சேர்ந்த க, ங என்பவர் (இயைபான ஆளின் பெயர், விவரணம் மற்றும் முகவரி) ................. ............................. (இயைபான ஆள்)

20........ ஆம் ஆண்டு .....................மாதம் ............ ஆந் நாள்.

மேலே பெயர் குறிப்பிட்ட துன்புற்ற ஆளின் (அல்லது துன்புற்ற ஆட்களின்) (அத்துடன் விடயம் அவ்வாறாயின் சேர்க்க. அவரது பதிவுபெற்ற அற்றோணி இ, எ, என்பவர் மூலம் தோற்றும்)

பிராதானது பின்வருமாறு கூறுகிறது :-

(இங்கு வழக்கின் சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.)

என்றிவ்வாறு கூறவும்

ஆகவே, துன்புற்ற ஆள் (அல்லது துன்புற்ற ஆட்கள்) 20....... ஆம் ஆண்டு ............... மாதம் ................ ஆம் நாளிலிருந்து பிரதிவாதிக்கெதிராக பாதுகாப்புக் கட்டளையொன்றுக்காகவேண்டி நிற்கின்றார்.

..............................................

விண்ணப்பதாரரின் ஒப்பம்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*